ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2229/2 - 2021 මැයි මස 24 වැනි සඳුදා - 2021.05.24
2229/2 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆந் திகதி திங்கட்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்**

3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, முதலீட்டு ஊக்குவிப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சராகவிருக்கும் நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், வெல்கம் ஹோட்டல்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில் 2016, யூலை 04 ஆந் திகதிய 1974/ 7 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அடுத்துப்பின்னரான கட்டளையினால் திருத்தப்பட்டவாறான 2012, ஒற்றோபர் 31 ஆந் திகதிய 1782/ 28 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளைக்கு மேலதிகமாக இக்கட்டளை மூலம் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன்:-

2016, யூலை 04 ஆந் திகதிய 1974/ 7 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான அடுத்துப்பின்னரான கட்டளையினால் திருத்தப்பட்டவாறான, 2012, ஒற்றோபர் 31 ஆந் திகதிய 1782/ 28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின் (4) ஆம் வாசகமானது, கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வழங்கப்பட்ட காலத்தை 2022.01.01 ஆந் திகதியிலிருந்து பதினெட்டு (18) மாதங்களைக் கொண்டவொரு மேலதிக காலப்பகுதிக்கு நீடிப்பதற்கென, பின்வருமாறு வாசிக்கப்படும் வகையில் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-

“(4) மேற்கூறப்பட்ட, “மேல் மாகாணத்தில் கொழும்பு 01, கோட்டையில் சொகுசு ஹோட்டல் ஒன்று உள்ளடங்கலான கலப்புப் பயன்பாட்டுக் கட்டிடத் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்கும், கட்டியெழுப்புவதற்கும் மற்றும் தொழிற்படுத்துவதற்குமான கருத்திட்டம், திருத்தப்பட்டவாறான சொல்லப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக கலப்பு பயன்பாட்டு கருத்திட்டத்துக்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட திகதியிலிருந்தான காலப்பகுதியினுள், 2023.06.30 ஆந் திகதியில் வர்த்தகத் தொழிற்பாடுகளைத் தொடங்குதல் வேண்டும்.”

**மஹிந்த ராஜபக்ஷ** (பா.உ.),
நிதி அமைச்சர்.

கொழும்பு,
2021, மே 24.

06-194

1A - PG 5447 — 545 (2021/05) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.